## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 1-6 - பரிவதில்
### ('எம்பெருமான் எளிதாக ஆராதிக்கத் தக்கவன்' என்று உபதேசித்தல்)

2730 * பரிவதில் ஈசனைப் பாடி * விரிவது மேவலுறுவீர்! **
பிரிவகை இன்றி நன்னீர் தூய் * புரிவதுவும் புகை பூவே 1

2731 மதுவார்[1] தண்ணந்துழாயான் * முதுவேத முதல்வனுக்கு **
எதுவேது? என் பணி? என்னாது * அதுவே ஆட்செய்யுமீடே 2

2732 ஈடும் எடுப்புமில் ஈசன் * மாடு விடாது என் மனனே **
பாடும் என் நா அவன் பாடல் * ஆடும் என் அங்கம் அணங்கே 3

2733 அணங்கென ஆடும் எனங்கம் * வணங்கி வழிபடும் ஈசன் **
பிணங்கி அமரர் பிதற்றும் * குணங்கெழு கொள்கையினானே 4

2734 கொள்கை கொளாமை இலாதான் * எள்கல் இராகம் இலாதான் **
விள்கை விள்ளாமை விரும்பி * உள்கலந்தார்க்கு ஓர் அமுதே 5

2735 அமுதம் அமரர்கட்கு ஈந்த * நிமிர்சுடர் ஆழி நெடுமால் **
அமுதிலும் ஆற்ற இனியன் * நிமிர்திரை நீள்கடலானே 6

2736 நீள்கடல் சூழ் இலங்கைக் கோன் * தோள்கள் தலை துணி செய்தான் **
தாள்கள் தலையில் வணங்கி * நாள்கடலைக் கழிமினே 7

2737 கழிமின் தொண்டர்கள்! கழித்து * தொழுமின் அவனைத் தொழுதால் **
வழி நின்ற வல்வினை மாள்வித்து * அழிவின்றி ஆக்கம் தருமே 8

2738 தரும அரும் பயனாய * திருமகளார் தனிக்கேள்வன் **
பெருமை உடைய பிரானார் * இருமை வினை கடிவாரே 9

2739 கடிவார் தீய வினைகள் * நொடியாரும் அளவைக்கண் **
கொடியா அடுபுள் உயர்த்த * வடிவார் மாதவனாரே 10

2740 * மாதவன் பால் சடகோபன் * தீதவம் இன்றி உரைத்த **
ஏதமில் ஆயிரத்து இப்பத்து * ஓத வல்லார் பிறவாரே 11

**அடிவரவு:** பரிவது மது ஈடும் அணங்கு கொள்கை அமுதம் நீள் கழிமின்
தரும் கடிவார் மாதவன் பிறவி

[1] வதுவார்